# இந்திய பன்னாட்டு வர்த்தக கண்காட்சியில் புதுச்சேரி நாள் விழா

**புதுச்சேரி, நவ. 23–**

டில்லி இந்திய வர்த்தக அபிவிருத்தி நிறுவனம் சார்பில் டில்லி பிரகதி மைதானத்தில் இந்திய பன்னாட்டு வர்த்தக கண் காட்சி கடந்த 14ம் தேதி முதல் நடந்து வருகிறது.

வரும் 27ம் தேதி வரை நடக்கும் கண்காட்சியின் முக்கிய நிகழ்வாக புதுச் சேரி நாள் விழாவை கவர் னர் தமிழிசை நேற்று துவக்கி வைத்தார்.



டில்லி இந்திய வர்த்தக அபிவிருத்தி நிறுவனம் சார்பில் நடக்கும் இந்திய பன்னாட்டு வர்த்தக கண்காட்சியில் புதுச்சேரி நாள் விழாவை கவர்னர் தமிழிசை நேற்று துவக்கி வைத்தார். அருகில், சிவசங்கரன் எம்.எல்.ஏ.,

இந்த ஆண்டின் கருப் பொருளாக "கிராமத்தின் குரல் உலக அளவில் சென்று சேர வேண்டும்" என்பதை மையமாக கொண்டு, கண்காட்சியில் உலக அளவில் 15 நாடுக ளின் நிறுவனங்கள், இந் திய அளவில் அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 2500 நிறுவனங்கள் கலந்து கொண்டுள்ளன.

புதுச்சேரி அரசின் தொழில் மற்றும் வணி கவரித் துறை, மாவட்ட தொழில் மையம் மூலம் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் 52 நிறுவனங் களில் உற்பத்தி செய்யப் படும் பொருட்கள், 30 கைவினை கலைஞர்களின் டெரகோட்டா, காகிதகூழ் பொம்மைகள், தோல் பொருட்கள், மரப்பொருட் கள் போன்றவை காட்சிப் படுத்தப் பட்டுள்ளன.

புதுச்சேரி டி.ஆர்.டி.ஏ., சுய உதவிகுழுக்களின் தயா ரிப்பு பொருள்களும் விற்ப னைக்கு வைக்கப்பட்டுள் ளன.

புதுச்சேரி மற்றும் காரைக்கால் கலைஞர்க ளின் பரதநாட்டியம், கிரா மிய நடனம், கரகாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

நிகழ்ச்சியில் புதுச்சேரி எம்.எல்.ஏ., சிவசங்க ரன், நிதி செயலர் ராஜு, தொழில் மற்றும் வணி கத்துறை செயலர் ஜவ ஹர், தொழில் மற்றும் வணிகவரித்துறை இயக்கு னர் யாசின் லட்சுமி நாரா யண ரெட்டி, தொழில் துறை துணை இயக்குனர் மோகன்குமார் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண் டனர்.